விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு


Valampurii




சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 03 புதன்கிழமை (19.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 243

# வெளிநாடு வாழ் தமிழ் மக்களுடன் இலங்கை அரசு பேச வேண்டும்!

## அமெரிக்கா வலியுறுத்தல்



(லண்டன்)

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மற்றும் அரசியல் கருத்து இணக்கத்தை ஏற்படுத்துவது என்பன தொடர்பில் உள்நாட்டில் உள்ள தமிழர்களுடன் மட்டு மல்ல வெளிநாடு வாழ் தமிழர்களுடனும் இலங்கை அரசு பேச்சுகளை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள் ளது. இலங்கை தனது அதிகாரங்களை சிறுபான்மைத் தமிழ் மக்களுடன் பகிர்ந்து கொள்ளத் தவறியிருப்பது மீண்டும் வன்முறைகளுக்கு வழியேற்படுத்திவிடும் என அமெரிக்க வெளிவிவகாரத்துறை துணை அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் எச்சரித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் அமைப்பு தலைதூக்கவே முடியாது

### ஜனாதிபதி உரை



(இரத்தினபுரி)

விடுதலைப்புலிகள் எந்த உருவிலும் தலை தூக்க தனது அரசு அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற யுத்த வெற்றியின் கொண்டாட்ட நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய (16ஆம் பக்கம் பார்க்க)



சனத்திரளின் மத்தியில் நல்லூர் கந்தனின் சப்பறப் பவனியை படத்தில் காணலாம்.

## ஆயிரத்து 380 மில். ரூபாயை வழங்க உலக வங்கி இணக்கம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக உலக வங்கி ஆயிரத்து 380 மில்லியன் ரூபாயை வழங்க இணங்கியிருப்பதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இந்த மேலதிக கடன் நிவாரணம் வழங்கப் பட உள்ளது.

இதனை தவிர நாட்டின் ஏனைய பிரதேசங்களின் சுகாதார மேம்பாட்டுக்காகவும் உலக (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலை நடத்த அனுமதிக்கப் போவதில்லை!

### ஜே.வி.பி. கூறுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி ஆட்சிமுறை ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதால், அந்த ஆட்சிமுறையை உடனடியாக இல்லாது ஒழிக்க வேண்டுமென வலியுறுத்தியிருக்கும் ஜே.வி.பி. கட்சி, ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சித்தால் அதற்கு எதிராக வீதியில் இறங்கி போராடப் போவதாகவும் அதனை நடத்த அனுமதிக்கப் போவதில்லை எனவும் (16ஆம் பக்கம் பார்க்க)

## தடைசெய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசினால் குற்றம்

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு

(சென்னை)

தடை செய்யப்பட்டுள்ள இயக்கங்களை ஆதரித்துப் பேசுவது குற்றமாகும் என்று தமிழ்நாடு அரசு எச்சரித்துள்ளது.

அத்துடன், தடை செய்யப்பட்டுள்ள இயக்கங்களின் தலைவர்களின் படங்கள், கொடி மற்றும் இலட்சினைகளை (சின்னம்) பொது விளம்பரங்களில் (16ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளத்தால் 5 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வன்னியில் தமிழ் மக்கள் தங்கவைக்கப் பட்டுள்ள முகாம்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக குறைந்தது 5 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் ஒரு சிறுவனும் அடங்கும்.

வெள்ளத்தால் (16ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி பாதுகாப்பு ஏற்பாடுகள் எந்த சூழ்நிலையிலும் தளர்த்தப்படாது

### ஜெனரல் சரத்பொன்சேகா உறுதி

(கொழும்பு)

வடபகுதியில் தற்போது சுமுகமான ஒரு நிலை காணப்படுகின்ற போதிலும் எந்த வொரு சூழ்நிலையிலும் அந்தப்பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குறைக்கப் போவதில்லை என பாதுகாப்பு பிரதான அதிகாரி ஜெனரல் சரத்பொன்சேகா திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்.

கண்டிக்கு நேற்று முன்தினம் திங்கட் கிழமை பயணம் ஒன்றை மேற்கொண்ட சரத் பொன்சேகா, அஸ்கிரிய பிரிவு மகாநாயக்க தேரரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திய போது, பயங்கரவாதிகள் இன்னும் முழுமையாக படையினரால் அழிக்கப்பட வில்லை. தீவிரமான பயங்கரவாதிகள் கூட பலர் உள்ளனர் எனத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் (16ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலிஸ்—இராணுவம்—புலிகள் நட்புறவு சமாதான காலத்திலேயே இடம்பெற்றது

## குற்றஞ்சாட்டுகிறார் பாதுகாப்பு செயலர்

(கொழும்பு)

அரசாங்கங்கள் சிலவற்றின் ஆட்சியின் போது இடம்பெற்ற சமாதான பேச்சுவார்த்தைகளின் போதே பொலிஸ் மற்றும் இராணுவத்தில் இருக்கும் சிலர் விடுதலைப்புலிகளுடன் கடும் நட்புறவுகளை ஏற்படுத்திக் கொண்டதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போது, புலிகளுக்கும், அரசாங்க பாதுகாப்பு படையினருக்கும் இடையில் இணைப்புக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இந்த சந்தர்ப்பங்களில் சில பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளின் குறைகளை அறிந்து விடுதலைப் புலிகள் அவர்களுக்கு பண உதவிகளை செய்துள்ளதுடன் அந்த தொடர்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கோத்தபாய கூறியுள்ளார்.

புலிகளுக்கு உதவியதாக கூறப்படும் பொலிஸ் அத்தியட்சகர் கைது செய்யப்பட்ட பின்னர் மிக முக்கிய பல தகவல்கள் வெளியாகி வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு சந்தேக நபர்கள் குறித்து பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகள் ஊடகங்களில் வெளியிடப்பட்டதால், கைது செய்யப்படவிருந்த பிரதான சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இதனால் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தகவல்களை வெளியிட்ட பொலிஸ் அதிகாரிகளை தாம் கடுமையாக எச்சரித்துள்ளதாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(ச- 5)




தேரேறி துயர் தீர்ப்பாய்

யாழ்பாடி நல்லூரில் அமர்ந்தவனே - முருகா
அடியவர்கள் குறை தீர்க்கும் வேலவனே - முருகா
வள்ளி தெய்வானையுடன் வேலவனே - முருகா
தேரேறி நீ வருவாய் வேலவனே - முருகா
அடியார்கள் வடம் பிடித்துன் தேரிழுக்க - முருகா
தென் திசையாய் திருப்பிடுவாய் முதல் கணமே - முருகா
அல்லல்படும் முகாம் மக்கள் வாழ்க்கையிலே - முருகா
அருள் பொழிந்து ஒளி கொடுப்பாய் வேலவனே - முருகா
எல்லையில்லா அவர்கள் படும் வேதனையை - முருகா
எளிதாக தீர்த்தருள்வாய் வேலவனே முருகா!

சுபம்

ஆக்கியோன்:- நல்லூர் முருகன் திருமண சேவை,
நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி.
077 8002788, 060 2734194

(3274) உங்கள் ஒத்துழைப்பே எங்கள் வளர்ச்சி!



ஸ்ரீகாந் புத்தகசாலை

பாடசாலை உபகரணங்கள், போட்டோ கொப்பி அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

501, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.


## வவுனியாவில் புதிய சிறை!

(கொழும்பு)

வவுனியாவில் விரைவில் முழு வசதிகளுடன் கூடிய சிறைச்சாலை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் வி.ஆர்.டி.டி.சில்வா இந்தத் தகவலை தெரிவித்தார்.

சிறை வளாகத்துக்குள் கட்டடங்கள் மற்றும் தேவையான வசதிகளை அமைக்கும் பணிகள் முடிபுக் கட்டத்தை நெருங்கிவிட்டன எனவும் அவர் தெரிவித்ததார். சிறைக் காவலர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன.

எதிர்வரும் நாட்களில் பயிற்சி பெற்ற சிறைக் காவலர்கள் 167 பேர் சேவையில் இணைந்து கொள்ளவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி நிறைவு விழா நேற்று செவ்வாய்க் கிழமை வெலிக்கடை சிறைச்சாலையில் நடைபெற்றது.

இந்த புதிய காவலர்கள் அனைவருக்கும் நவீன ஆயுதங்களைக் கையாள்வதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்று சிறை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ச-5)


இளவரசி சேலைச்சோலை
(பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்)

ELAVARASI TEXTILE
(Specialist in Wedding Sarees)



57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

57, New Market,
JAFFNA.

Tel.- 0212222503



வேல் முருகன் வாணிப நிலையம்

Velmurugan Traders

தற்காலிக நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண பெயின்ட் வகைகளும் சுண்ணாம்பு கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்.

56A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



PC SOLUTIONS

Computer Sales &
Maintenance Centre

527/1, Navalar Road,
Jaffna.

mobile :- 07737929904

pcsjaffna @ gmail.com


## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் விமானம் மூலம் நாளை எடுத்துவரப்படும்

(யாழ்ப்பாணம்)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் நாளை விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இவ் வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு 3 இலட்சம் மாணவர்கள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச- 5)


நல்லைக் கந்தன் சைவ விலாஸ் உணவகம்

சகல விதமான சைவ உணவு வகைகளையும் ஓடருக்கு பெற்றுக் கொள்ளலாம்.

T.P.:-0602216780

7/8, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



அறிவித்தல்

வடமராட்சி சிகை அலங்கரிப்பு சங்கத்தினால் 18.08.2009 அன்று நடைபெற்ற பொது கலந்துரையாடலின்படி வடமராட்சியிலுள்ள சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களும் 19.08.2009 (புதன்கிழமை) தொடக்கம் புதன்கிழமை விடுமுறை தினமாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

(C-3084) -நிர்வாகம்.



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

களஞ்சியப் பொறுப்பாளர் தேவை(ஆண்கள் மட்டும்)

கல்வித்தகைமை : க.பொ.த. (சா/தரம்) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
அனுபவம் : குறிப்பிடப்பட்ட பதவியில் ஆகக்குறைந்தது 03 வருட முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.
வயது : இன்றைய திகதியில் 40 வயதிற்கு குறையாமலும் 65 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
சம்பளம் : பேசித்தீர்மானிக்கப்படும்.

இத்தகைமைகளுடன் மக்களின் நன்மதிப்பை பெற்ற இருவரின் சிபார்சு கடிதத்துடன் 21.08.2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது சங்க காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.


(சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

-செயலாளர்.

(C-3085)






இன்று தேரேறிவரும் நல்லூர் முருகனின் ஆசி அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்

யாழ் நகரில் முன்னணிப் பயிற்சியாளர்கள்

கிருபா லேணர்ஸ்
சாரதி பயிற்சி பாடசாலை



புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள விசேட வாகனப் பயிற்சியும் மற்றும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்களும் நடாத்தப்படும்.

தலைமைக் காரியாலயம்:
225, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 2224353
0777 225292

கிளை நிறுவனம்:
மகாத்மா வீதி,
நெல்லியடி.
060 2006550

(3274)

# நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் நல்லூர் நாவ லர் மணி மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் சமயச் சொற் பொழிவுகளும் கலைநிகழ்வுகளும் நிகழ்வில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை ''இர தோற்சவ தத்துவம்'' எனும் விடயம் பற்றி சைவப்புலவர், சைவ சித்தா ந்த பண்டிதர், ஆசிரியர் கு.சுமுக லிங்கம் மற்றும் சைவப்புலவர், சைவசித் தாந்த பண்டிதர் கந்த சத்தியதாசன் ஆகியோ ரின் சொற் பொழிவு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து அளவெட்டி விநாய கர், மல்லாகம் நீலியம்பனை,சங் கரத்தை முருக மூர்த்தி ஆகிய அற நெறிப் பாடசாலை மாண வர்களின் கலைநிகழ்வுகளும்இடம்பெறவுள்ளன.

✠✠✠

இளங்கலைஞர் மன்றம் தெல் லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தா னத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க் காதேவி மணிமண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிரை பொன். ஸ்ரீவாமதேவனின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் அணிசெய் கலைஞர்க ளாக. வயலின் கே.குகபரன், மிருதங் கம் எஸ்.துரைராசா, கெஞ்சிரா வி.சிவமூர்த்தி, முகர்சிங், எஸ். செந் தூரன், கடம் ஏ.செல்வரத்தினம் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

✠✠✠

நல்லூர் உற்சவத்தை முன் னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயத்தில் கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் ''கம்பராமாயணம்'' பற்றி இசைச்சொற் பொழிவில் இன்று புதன் கிழமை 6 மணிக்கு '' இராம இராவண யுத்தம்'' பற்றி சொற் பொழிவாற்றவுள்ளார். (ஓ)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பான கலந்துரை யாடல் யாழ் புதிய உயர்கல்லூரியில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை நடை பெறவுள்ளது.

இதில் 31.12.2005 இல் மூன்று வருடம் பூர்த்தி செய்து, பதிவுசெய்த தொண்டர் ஆசிரி யர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகம் தரு மாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ)

## நல்லை ஆதீனத்தில் அகண்ட நாம பஜனை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழும் மக்களுக்கு அமைதியும் சாந்தியும் கிடைக்க வேண்டி நல்லை ஆதீனத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நாளை வியாழக் கிழமை வரை காலை 9 மணி முதல் பி.ப 3 மணி வரை அகண்ட நாம பஜனை நடை பெற்று வருகின்றது.

அத்துடன் தொடர்ந்து இசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (ஓ)

# சிறந்த பயிற்றுனருக்கான விருதுபெறும் கூடைப்பந்தாட்ட பயிற்றுனர் ஏ.சி. பிரான்சிஸ்



(யாழ்ப்பாணம்)

வலிகாம கல்வி வல யத்தில் விளை யாட்டுத் துறை யில் சாதனை நிகழ்த்திய மாணவர் களை கௌரவிக்கும் நிகழ்வில் யாழ்ப்பா ணக் கல்லூரி கூடைப் பந் தாட்ட பயிற்றுனர் ஏ.சி. பிரான்சிஸ் சிறந்த பயிற்றுனருக்கான விருது வழங்கி கௌரவிக் கப்பட்டுள்ளார். இவர் கல்லூரியில் ஹொக்கி அணி பயிற்றுனராக இருந்த காலத் தில் ஹொக்கி அணிகள் தேசிய மட்டப் போட்டிக ளில் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவ்வாண்டு கல்லூரி யின் கனிஷ்ட இணை உப அதிப ராக பதவியேற் றதுடன் தென்னிந் திய திருச்சபை அனைத்து சிறுவர் இல்ல பொதுமுகாமையாளராகவும், பழைய மாணவர் சங்க பொருளாளராகவும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ஓ-27)

## ஜெபநேசர் மண்டபத்தில் மீண்டும் ஆராதனை

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை நவீன சந்தையில் உள்ள ஜெப நேசர் மண்டபத்தில் தேவசபை (அசம் பிளி ஒவ்கோட்) மக்களால் நடத்தப் படும் ஞாயிறு ஆராதனை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது என்று போதகர் அருள் செல்வநாயகம் தெரிவித் துள்ளார். (ஓ-72)


## உங்களிடம் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்

உலகத் தொலைக்காட்சிகளில் முதல் முறையாக தமிழ் - சிங்கள கலாசாரங்களை மையமாக வைத்து தமிழ், சிங் கள, தென்னிந்திய நடிகர்கள் ஒன்றாக இணைந்து உள் நாட்டிலும் (கனடா, லண்டன்) உட்பட வெளிநாடுகளிலும் படமாக்கப்படும் சின்னத்திரை குறும்படத்தில் நடிப்பதற்கு நடிகர், நடிகைகள் தேவை.

26-08-2009 புதன் காலை 9.00 மணிக்கு நேரில் வரவும். 1960, 1970, 1980, 1990, 2000 அக் காலத்தைய தமிழ் கலாசாரம், தமிழ் மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என் பதைக் காட்டுவதற்கு உங்களிடம் உள்ள அக்காலத்துப் பொருட்களை அன்புடன் கேட்கின்றோம்.

பழைய கைரிக்ஷா, பத்திரிகைகள், வீரகேசரி, ஈழநாடு, தட்டிவான், சவலெற்வான், பெட்போட் லொறி, A40கார், ஒக்ஸ்போர்ட், சோம செற்கார், மொறிஸ் மைனர்கார், கிராம போன், ரெலிபோன், றேடியோ, பழையகால புகைப்படங்கள், மைபேனா, ஆட்டோ, ஏர் கலப்பை, கூடார மாட்டு வண்டில், மூக்குபேணி (பித்தளை) வெற்றிலை தட்டு, உரல், மாவாட் டும் கல், மோட்டார்சைக்கிள், உழவு இயந்திரம், குதிரை வண்டில்,

எங்கள் கலைத் தொண்டிற்கு தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வீடியோ கலாமினி
அச்சுவேலி.

(3272)




# Brown & Company PLC
# Office Automation



தேரேறும் முருகா உன்னருள் தா மருகா

வடக்கின் வசந்தத்தில்
யாழ். மண்ணில் உங்களுடன் புதிதாக இணையும்
**DIGITAL ELECTRONCICS**
அனைத்து வகை SHARP அலுவலக சாதனங்கள்
(Photo Copiers, Projectors, Fax Machincs, Cash Registers, Toners)



- 25,000 பிரதிகள் எடுக்கக் கூடிய Toner இலவசம்
- 01 வருடம் / 50,000 பிரதிகள் உத்தரவாதம்
- முதல் வருடத்திற்கு இலவச சேவை

எம்மிடம் 3,000/= பெறுமதிக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் 1ஆம், 2ஆம், 3ஆம் அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே 3,000, 2,000, 1,000 ரூபா பெறுமதியான பரிசுகள் அல்லது அடுத்த உங்களது கொள்வனவில் விலைக் கழிவுகள்.

"விற்பனைக்கு பிந்திய தரமான சேவை வழங்குநர்கள்"

**Authorized Dealers:**
Digital Electronics
62/16, Stanley Road,
Jaffna.

அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்
டிஜிரல் எலக்ரோனிக்ஸ்,
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்.
(ஸ்ரான்லி வீதி, கொமர்ஷல் வங்கி அருகாமையில்)

தொடர்புகளுக்கு : 021 - 222 4040


# பாராட்டுவிழா

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக தொடர் இசைச் சொற்பொழிவின் இன்றைய நிகழ் வில் மாலை 6.30 மணிக்கு நல் லூர் சைவ மகா சபை தலைவர் து. இராஜன் தலைமையில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் இசைப் பேருரை நிகழ்த்தி வரும் கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந் தசர்மா கௌரவிக்கப்படவுள் ளார். இதில் விழாவின் நாயகனுக்கு ஓய்வு பெற்ற நீதிபதி திருநாவுக்கரசு பொன் னாடை போர்த்தி கௌரவிப்பதுடன், பாராட்டுரையும் வழங்கவுள் ளார். தொடர்ந்து செல்வி புஸ்பா செல் வநாயகம் வாழ்த் துரையும் வழங்கு வார். (ஓ)

## இராசி பலன்

19.08.2009
(ஆவணி 3, புதன்கிழமை)
சதுர்த்தசி முன்னிரவு 6.44 மணிவரை
பூசம் பிற்பகல் 12.38 மணிவரை
இராகுகாலம் 12.05- 1.35 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
போதாயன அமாவாசை
நல்லூர்க் கந்தன் தேர்

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், தாய்வழி உறவு, ரோகநிலை, அதிக பிரயாசை. |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், இஷ்டசித்தி, உறவினர் உதவி. |
| மிதுனம் | மனோ சங்கடம், காரிய தாமதம், கௌரவக்குறைவு, ரோகநிலை. |
| கடகம் | வெகுமானம், போசன சுகம், நல்ல முயற்சி, மாதர் நட்பு. |
| சிங்கம் | சோம்பல் நிலை, குடும்பக் கவலை, வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| கன்னி | குடும்ப சுகம், போசன நன்மை, காரிய அனுகூலம், போசன சுகம். |
| துலாம் | ஆரோக்கியம், இஷ்டசித்தி, பெரி யோர் உதவி, அதிகாரம். |
| விருச்சிகம் | எதிர்பாராத செலவு, உத்தியோக பங்கம், உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம். |
| தனுசு | மனக்கவலை, ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம், பொருள் விரயம். |
| மகரம் | குடும்ப மகிழ்ச்சி, கீர்த்தி, சயன சுகம், எடுத்த காரியம் கை கூடும். |
| கும்பம் | தேகநலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், நல்ல செய்தி. |
| மீனம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், அதிக பிரயாசை, போசன குறைவு. |

வளவன்

# ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான (CIMA) சீமா அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சீமா கற்கை நெறியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் மற்றும் கற்பித்தலில் இணைய விரும்பும் ஆசிரியர்களுக்கான அறி முக நிகழ்வு இன்று புதன் கிழமை மாலை 5 மணிக்கு உடுவில் பெண் கள் பாடசாலையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்து பயன் பெறுமாறு உடுவில் மகளிர் கல் லூரி அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## சந்நிதி முருகன் மஹோற்சவ கால விசேட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய உற் சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் நடத்தப்பெறும் விசேட நிகழ் வில் நாளை வியாழக்கிழமை முதல் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை காலை 10 மணி யளவில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நாளை வியாழக் கிழமை 'சாயிபஜனை' இடம்பெற வுள்ளது. நாளை மறுதினம் வெள் ளிக்கிழமை 'தேவி பாகவதம்' எனும் பொருளில் வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரை யாளர் அ. குமாரவேல் சொற் பொழிவு ஆற்றவுள்ளார். (ஓ)

## நுளம்புத் தொல்லை மீண்டும் அதிகரிப்பு

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு நுளம் புத்தொல்லை அதிகரித்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

அப்பகுதியில் நிறைந்திருக்கும் செடி கொடிகள், பற்றைகள், குப்பை கூளங் களை அகற்றுவதில் உரியவர்கள் கவனமெடுக்காததால் இந்த நிலை ஏற் பட்டுள்ளதாக மக்கள் தெரி விக்கின் றனர். (ஓ-72)

# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009

ஆறுமுகம் கொண்டவனே உன் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.




## ஈஸ்வரன் ரேடர்ஸ் & ஈஸ்வரன் ராண்ஸ்போர்ட்

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் கண்ணைக் கவரும் சிறுவர்களுக்கான சைக்கிள்கள் அனைத்தையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய நாட வேண்டிய இடம்

**இல. 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி – 021 222 2813**


## யாழ். நகரில் புதிய பொலிவுடன்






# E.S.P.N & Co.

- யப்பானிய தொழில்நுட்பத்துடன் புத்தம் புதிய லுமாலா ஆண், பெண் ஸ்போட்ஸ், யுனியர் துவிச்சக்கர வண்டிகளும், அதன் உதிரிப்பாகங்களும்.
- இந்தியாவில் உற்பத்தியாகி உலகத் தரக்கட்டுப்பாட்டின் ISO 9001 சான்றிதழ் பெற்ற புத்தம் புதிய கீரோ ஆண், பெண் ஸ்போட்ஸ், யுனியர் மிதிவண்டிகளும் உதிரிப்பாகங்களும்.
- வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மௌவுண்டின், சொப்பர் மிதிவண்டிகளும், பேபி வோக்கர், பேபி பிறேம், பேபி கார் வகைகளும்.
- பல்வகையான தொலைக் காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், சீடி, டெக் வகைகள், கசற் ரேடியோ வகைகள், டிஸ் அன்ரனா வகைகள், ஓடியோ, வீடியோ கசற்றுகள் சீடி வகைகள், பிலிம்ரோல் வகைகள், மணிக்கூட்டு வகைகள், மிக்சி வகைகள், றைஸ் குக்கர், ஒவன் வகைகள், சாஜ்ஸர் லைற் வகைகள், மின் கேத்தில் வகைகளும்.
- பிளிக்ஸ் பிளாஸ்டிக் வீட்டுப் பாவனைப் பொருட்கள் தளபாட வகைகளும்.
- மோட்டார் வாகன ரயர், ரியூப் வகைகளும் மற்றும் தலைக் கவசங்கள்.



இவை அனைத்துப் பொருட்களையும் ஒரே நவீன மயப்படுத்தப்பட்ட காட்சி அறைகளில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்


## இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்

**52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Tel - 021 222 3096 Fax - 021 222 4394




E-Mail : espn.jf@ hotmail.com




# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009

## தேரேறி வந்து திருவருளை பொழியும் திருக்குமரா!

நல்லை நகர் வாசா , நாடும் பக்தருக்கு
நல்வழி காட்டும் நல்லைக் குமரா
- தேரேறி வந்து திருவருளைபொழியும்
திருக்குமரா
வடம் பிடித்து இழுத்தோம் ஐயா
வந்து எம்மவர் குறைகளை பாரும்மையா
வன்னி மக்கள் படும் துயர் தீரும் மையா
வருக , வருக வடிவேல் முருகா




சாயிராம் வர்த்தக நிறுவனம்
குளிர்சாதன, குளிரூட்டி, உதிரிப்பாகங்கள்,
GAS, விற்பனையாளர்கள்
(3248)
101, பலாலி வீதி, யாழ்ப்பாணம்



தேர் உலா வரும் நல்லைக் குமரன் அருள் என்றும் நிலைக்க...



சீமாட்டி
புடவைக் கடல்
கிளைகள் – மங்கை சில்க்ஸ்
மொடோன் மாக்கற் இல122, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.
இல15, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி – 021 222 2196 பக்ஸ் – 021 222 2102


## நல்லருள் புரிந்திடப்பா நல்லூர் கந்தா

நல்லை பதியில் வீற்றிருப்பவன்
நல்லூர்க் கந்தன் அவன்
தெய்வ முத்துக் குமரனவன்
தமிழ்த் தெய்வமாகிய முருகனவன்
மயில்தனை வாகன மாக்கியவன் நன்னாளாம்
திருநாளில் தேரேறி வருபவன்

உள்ளங்களைக் கொள்ளை கொண்ட –அவன்
நன்னாளில் யூதர்களாய்த் தடுப்பில் வாழும்
நல்லோர்க்குத் திருநாளில் – நீ வந்து
நல்லருள் புரிந்திடப்பா நம் விடுதலைக்காய்
நல்லூர்க் கந்தா.



த.கோகிலநாத்
குருநகர், நலன்புரி நிலையம்,
யாழ்ப்பாணம்.


நல்லூரான் ஆசிஅனைவருக்கும் கிடைக்கட்டும்
ஆட்டோ, மோட்டார் சைக்கிள், எலக்ரோனிக்
உதிரிப்பாகங்கள் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்
Siva Motors
சிவா மோட்டோஸ்



மனோகரா தியேட்டர் சந்தி அருகில்
486 A, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
Telephone:-
0779113962
0778736770



'தேரேறும் முருகா உன் அருள் தா மருகா'
உங்கள் இல்லங்களை அழகுபடுத்த மனம் கவரும் வர்ணங்களை
அள்ளி வழங்குகின்றது




asian paints



ஏஷியன் பெயின்ற்ஸ் அக்ரிலிக் எமல்சன்

- நீண்ட கால பாவனைக்கு
- மிருதுவான வேலைப்பாட்டிற்கு
- கூடுதலான பரப்பளவிற்கு பூசக் கூடியது
- பிரகாசமானதும் , பளபளப்புத் தன்மை கொண்டதும்
- கவர்ச்சி மற்றும் தெளிவு மிகு வர்ணங்களைக் கொண்டதும்

பாரிய எண்ணிக்கையிலான நிறவரிசை – பல்வேறு வர்ணங்களைக் கொண்டதும்



இவையெல்லாம் உங்களது பணத்திற்கும் மேலான பெறுமதி பரிபூரணமன நிம்மதி
ஏஷியன் பெயின்ற்ஸ் வேதர்ரவ் அல்ரிமா
வெயில், காற்று, மழையின் தாக்கத்திற்கு தாங்–கும் வகையில் உருவாக்கப்பட்டது தான்
ஏஷியன் பெயின்ற்ஸ் வேதர்ரவ் அல்ரிமா
(Asian paints weathertuff Ultima)
7 வருட உத்தரவாதம்
உங்கள் வர்ணப் பூச்சு தேவைகள் அனைத்திற்கும் உங்கள்
பிரதேச ஏஷியன் பெயின்ற் விற்பனையாளர்களை நாடுங்கள்



ஏஷியன் பெயின்ற்ஸ்
வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்




யாழ்ப்பாணஇரும்பகம்
32,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 022 7028
(சி/3064)

# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009


நல்லூர்க் கந்தனே நலிவுற்றிருக்கும் ஏமக்கருள் தருவாயே !

**P.S. Service Station**

P.S. சேர்விஸ் ஸ்ரேசன்



லொறி, கார், பஸ், ஆட்டோ, மோட்டார் சைக்கிள் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.

எஞ்சின் ஓயில், கியர் ஓயில், பனற் ஓயில் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

257/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி - 021 222 9247

C-3063

"இரத பவனி வரும் நல்லை வாழ் முருகா உன் நல்லருள் தந்து காத்திட வாரும்"



தேனீர் , சிற்றுண்டி வகைகள், குளிர்பான வகைகள், பிஸ்கட் வகைகள் மற்றும் அனைத்து விதமான உணவு வகைகளையும் பெற்றிட நாடுங்கள்

யாழ்ப்பாணம் -கொழும்பு தமிழ் ஆங்கில நாளிதழ்கள் வார இதழ்களையும் பெற்றுக்கொள்ளலாம்.


## சிவ ஆனந்தா கபே

648,பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள் வாகன பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.

சிறந்த பிளாஸ்ரிக் உற்பத்திகளும் செய்து கொடுக்கப்படும்.



இல. 08. கனக சபை லேன்
சிவலிங்கப் புளியடி
வண்ணார்பண்ணை.
தொலைபேசி – 021 222 8680

"இன்று தேர்ப்பவனி வரும் நல்லூர் முருகனின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்"



## அன்னை புத்தகசாலை



கொழும்பில் உள்ள சகல புத்தகசாலைகளின் வெளியீட்டுப் புத்தகங்களையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளவும் தரம் 5 புலமைப் பரிசிலில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு விசேடமாக 2009க்கான புத்தகங்களை பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும் விசேட விலைக் கழிவு - அத்துடன் விசாலமான இடவசதியுடன் தாங்களே தங்கள் தெரிவுகளை பார்த்து எடுத்துக்கொள்ளக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அன்னை புத்தகசாலை

இல.7 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

"இன்று தேர்ப்பவனி வரும் நல்லூர் முருகனின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்"

## J.T ரான்ஸ் போர்ட்

யாழ். கொழும்பு

கொழும்பு-யாழ்.

சகலவிதமான பொருட்கள் நியாயமான கட்டணத்தில் வந்து தருவிக்கப்படும்



இல. 302 ஆஸ்பத்திரி வீதியில்

முப்பத்தொன்பது வருடகாலம் மதிப்போடு விளங்கிய

யாழ். வணிக நிலையம்

மிக நவீன முறையில் அமைக்கப் பெற்று

இலக்கம் 338, 336 ஆஸ்பத்திரி வீதியில்

யாழ்.குடாநாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் இயங்கிவருகின்றதுஎன்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

குழந்தைகளின் பால்மா வகைகள், பிஸ்கற் வகைகள், மென் கீறிம் வகைகள், குளிரூட்டப்பட்ட அங்கர் பட்டர் மாஜரின் வகைகள் ,குரக்கன், எள்ளு, தேயிலை மற்றும் சகல வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

## யாழ்ப்பாண வணிக நிலையம்

*Jaffna Traders*

இல 338,336 ஆஸ்பத்திரி விதி, யாழ்ப்பாணம்.

# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009

## ஊர் கூடி தேரிழுக்கும் நாளின்று

ஊர் சேர்ந்து வடம் பிடிக்க ஊர்ந்து வரும் தேரதனில்
உழவனது ஏர்போன்று வேலேந்தும் முருகா
ஈர்பத்து நான்கின்று உனது கொடி ஏறி
ஊர்பத்தும் தேர்கண்டு உளமார தேறி
நீராடி மகிழ்வுறவே மேலுமொரு பொழுதெண்ணி
நீயமர்ந்து வருகின்றாய் நல்லையுறை நாதா
தேர்முன்னும் பின்னுமாக திரண்டு வரும் பக்தர்
துயரதனை தீர்ப்பாயே தங்கவேல் முருகா!

அல்வாயூர்
கே. ஆர், திருத்துவராஜா

"எல்லாம் வல்ல நல்லூர் முருகனின்
அருள் கிடைக்கட்டும்"
பல சரக்குப் பொருட்கள் மிக்சர்
தயாரிப்பிற்கான பொருட்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்
**ஜெகன்களஞ்சியம்**
இல. 285, கே. கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (3061)

"நல்லூர் முருகனின்
திருவருள் கிடைக்கட்டும்"
**ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்**
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான NOI நல்லெண்ணெய் மருத்துவத்திற்கும், உணவிற்கும் உகந்தது.
வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்டது.
**ஸ்பெஷல் நல்லெண்ணெய்**
A.K.D சீலைப்பார்த்து வாங்கவும்
உற்பத்தியாளர்கள்
K.N.கந்தையா
மூத்தநயினார் கோவிலடி
ஆணைக்கோட்டை.
(சி/3071)

## தேரேறி வரம்தருவாய் கந்தா!

நாத ஒலி முழங்க அரோகரா எனஆர்ப்பரிக்கும்
பக்தர் வடம் பிடிக்க
ஆடி அசைந்து வரும் தேரினிலே
வேலவன் வருகிறான் நல்லை வீதியிலே!
பேதங்கள் எதுவுமின்றி அடியவர் நாம் கூடிவிட்டோம்
ஆறுமுகா! உன் கடைக்கண் பார்வைபட்டு
எம் இடுக்கள் அகலும் என்று
எந்நாளும் உனை நாடி வந்தோம்
வேண்டி நின்றோம் நல்லைக்குமரா!
எமக்கு அருள்புரிவாய்! வரம் தருவாய்!
எம் உறவுகளை காத்திடுவாய்!

ஜெ.வினோத்,யாழ்ப்பாணம்

## எம் குறைகளை தீர்த்தருள்வாய்

சந்தனம் மணக்கும் குமரனே
தேரேறி வரும் கந்தா
வினைகள் தீர்க்கும் வடிவேலா
விருப்பங்களை நிறைவேற்றும் கடம்பா

அம்பனுக்கு பாடம் புகட்டிய
இளைய புதல்வனே
ஆண்டிக் கோலம் பூண்ட
மாம்பழக் கதை நாயகனே
விரும்பிய வள்ளிதனை
கைப்பிடித்தவனே
தெய்வேந்திரன் மகளை
மணம் முடித்தவனே
நலன்புரி வாழ்விலே
நலமற்று வாடும் எமக்கு
நல்லருள் தந்திடப்பா
நல்லைதனில் வீற்றிருக்கும் வேந்தனே

வேலாயுதம்பிள்ளை
அகிலேஸ்வரன்
குருநகர் நலன்புரி நிலையம்

## அடியாரின் அவலம் தீர்த்து அருள்வாயே அற்புதனே

பல்லுயிரும் பலவுலகும் படைத்துக் காக்கும்
பரமனவன் திருக்குமரா பழனிவேலா
தொல்லைமிகு துன்பங்கள் நீங்க அன்று
தொல்பதியாம் நல்லூரில் கோயில் கொண்டாய்
எல்லையில்லா நின்கருணை இன்பம் வேண்டி
இறைஞ்சுகின்றார் மக்களெல்லாம் தம் இன்னல் தீர
அல்லலுறும் அடியவரின் அவலம் தீர்த்து
அருள்வாயோ அற்புதனே அழகா! வேலா!


அருகிருந்த மக்களெல்லாம் அகதியாகி
ஆங்காங்கே முட்கம்பி வேலிக்குள்ளே
உருமாறி உடைமாறி உணர்வும் மாறி
உருக்குலைந்து வளம் நொந்து வாடுகின்ற
இருள்வாழ்வு நீங்கியவர் இன்னல் தீர
ஏற்றவழி காட்டிடவே இறைஞ்சுகின்றோம்
முருகா நீ வராயோ முறைதான் ஈதே
முப்போதும் வேண்டுகின்றோம் முன்னிற்பாயே!

நயினை நா. யோகநாதன்

"இன்று தேர்ப்பவனி வரும் நல்லூர்
முருகனின் திருவருள் அனைவருக்கும்
கிடைக்கட்டும்"
**சண் ஜெய உணவகம்**
சகல விதமான உணவு வகைகளும்,
சிற்றுண்டிவகைகளும் ஐஸ்கிறீம்,சோடா,சர்பத்,
நெல்லிரசம்,நெஸ்கோப்பி போன்ற அனைத்து விசேட
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
இல.414, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 9285417
077 6955757 (சி/3072)

## இன்று இரதோற்சவம் காணும் நல்லூர்க் கந்தன் சகலருக்கும் நல்வாழ்வளிக்க வேண்டுகின்றோம்!

**சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்**
**Sivan Motor Stores**
Dulux
AUTOFINISH
NEXA AUTOCOLOUR
Necol
N/C AUTOMOTIVE PAINTS
AkzoNobel
Tomorrow's Answers Today



**சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்**
சிவகுமரன் என்ரபிறைஸ்
Sivakumaran Enterprise
75, Stanly Road, Jaffna.
70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009

"உனை நாடி வருபவர்களுக்கு
நல்லருள் காட்டி விடு கந்தா"

## ரமணன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்



சகல விதமான கட்டடப் பொருட்களை
நியாய விலைக்கு குறித்த நேரத்தில் பெற்றுக்
கொள்ளலாம்.

525, 528, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 9296 (சி/3052)

---

"எல்லாம் வல்ல நல்லூர் முருகனின்
அருள் கிடைக்கட்டும்"
நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்





## நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்

2 G, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தொ. பே.021 222 5644 (சி/3053)

---

"தேருலா வரும் குமரன் அருள் எங்கும் பரவட்டும்"







## எரிக் கணேஷ் பல மூக்கு கண்ணாடியகம்

இல 546, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

கிளைகள்: 91 கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

86 கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

தொ.பே. 021 222 2486

---

"நல்லூர் கந்தனே நின்னருள்
அனைவருக்கும் கிடைக்க-ட்டும்"





## Pc IIS ARADISE COMPUTERS

61, Clock Tower Road,
Jaffna.
T.P 021 222 9579 - 0777 271220 (சி/3054)

---

"ஆறுமுகம் கொண்டவனே உன் அருள் கிடைக்கட்டும்
அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்கொ
நாடவேண்டிய ஸ்தாபனம்





## சிறி மதனா நகை மாளிகை

ஓடர் நகைகளை குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22
கரட்டில் செய்து கொடுக்கப்படும்

### கிளை: மதனா ஜுவல்லறி

கிளை: 177/3 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(சி/3057)
155/m கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

"தேர் உலா வரும் நல்லைக்குமரன் அருள் என்றும்
நிலைக்க வாழ்த்துகிறோம்"
ஆங்கில மருத்துவ வகைகள், ஊட்டச்சத்து, பால்மா வகைகள்
என்பவற்றை மலிவாக நியாய விலையில் பெற்றுக்கொள்ள

## R.V.G மருந்தகம்





இல. 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(O.P.D. முன்பாக)
தொ.பே. 021 222 2129
ஆர். வி. ஜி. ஸ்தாபனம்
இல. 58, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 6806 (சி/3055)

---

"தேரேறும் முருகா உன் அருள் தா மருகா
தரம் நாடுவோர் தவறாமல்
நாடுமிடம்








## ரூபி நகை மாளிகை

111/1 (227) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2828
(சி/3058) 021 222 9038

---

"முருகனே! முத்துக் குமரனே!"
வள்ளி தெய்வானையுடன் தேரேறி வந்தே வினைபோக்க வா! வா!

Dealers in all kinds & essence liquides
Colour Powder cent ointment etc...



## சிறிகாந் சென்ஸ் அன் குறோசரிஸ்

இல.161 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2219 (சி/3056)

---

"அனைவருக்கும் நல்லூரான் அருள் வேண்டி நிற்கின்றோம்"

தரம் குன்றா நகைகளை மலிவு விலையில் பெற்றிட






## பிறேம் நகை மாடம்
## PREM NAGAI MADAM

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
உரிமையாளர்:- இ.பிறேம்குமார்
தொ.பே. 077 241485
077 3039517
(சி/3059)
171, பிறேம் பிள்ளாஷா யாழ். வீதி, மானிப்பாய்.

# நல்லூரான் திருவடிக்கு இன்று தேர்த் திருவிழா



இன்று இரதோற்சவம், காலைப்பூசை - காலை 6.00 மணி
வசந்த மண்டப பூசை - காலை 6.15 மணி

## தேரின் வடம் தொட்டிழுப்போம்

ஆறுதலையில் முடியும் மார்பினில் உருத்திராட்சமணி
ஆறுமுகன் ஏறிவரும் தேர்
சூரனைக் கருவறுத்து தேவர்சிறை மீட்டுநின்ற
காரணர் இவரும் நல்ல தேர்
சக்திகள் எல்லாம் திரண்ட சக்தி கையிலே கொடுத்த
நித்தியவான் ஏறிவரும் தேர்
பக்தரெல்லாம் கூடிநின்று நல்லையிலே காணும் நல்ல
தேரின் வடம் தொட்டிழுப்போம் நாம்

கவிமணி கந்தமுருகேசதாசனார்.

## தேர் ஏறிவா ஐயா நல்லூர்க்கந்தா

நல்லையம்பதி வாழும் முருகையா - எமக்கு
நல்லருளை தந்திட தேர் ஏறையா
அல்லல் உறும் தமிழ் துயர் தீரையா - இந்த
அவனியிலே அமைதி தனை தா ஐயா

அலங்கார கந்தனே நீ அல்லவா - உனக்கு
ஆவணி அமாவாசை முதல் நாள் தேரல்லவா
கலங்கிடும் அடியாரை காத்தருள்வாய் - நாம்
களிப்புடன் வாழ்ந்திட அருள் பொழிவாய்

நா. கீதாகிருஷ்ணன் -நயினாதீவு

## நல்லூரான் தேரேறும் திருநாள்

ஊர் பறையும் புகழ்மிகுநல்
ஊர் உறையும் அருட்குமரன்
பார் துயரம் அகற்றிடவே
தேர் ஏறும் திருநாளே

கூர்மிகு வேலுடை குமரன்
தேரேறும் திருவழகு காண
பார் கவ்வும் குறை ஓடும்
சீர் கொண்டு மனம் வாழும்

அழகுருக் கொண்டவன் ஆலயத்தில்
அமுதவிழ் பூம்பொழில் மலரெடுத்து
மனமகிழ் வியாம்கொண் டொழுது நிற்க
இருளவிழ்ந் தொளிகொள்ளு மாம்வாழ்வு

ஜெ. உமாசுதன் - வடலியடைப்பு

## 'உந்தீபற' (திருவுந்தியார்)

நல்லைக் குமரன் வடிவேலன் நாமங்கள்
சொல்லிப் பரவியே சோலைக் குயில் நீ - உந்தீபற
சோதிப் பெருவெளி காட்டி நீ - உந்தீபற

தேனும் தினைமாவும் உண்ட களைப்பினால்
தேரடி மேவினான் நல்லைப் பிரான் - உந்தீபற
தேடுவார் தீவினை ஓடியதேயென்று - உந்தீபற

யாழ்ப்பாணம் மேவிய நல்லைக் குமரவேள்
மாப்பாணர் போற்றிய மன்னனென்றே - உந்தீபற
மாதுமை பாலனாமவனென்றே - உந்தீபற

எழுந்தது சூரியன் இரிந்தது காரிருள்
புகழ்தெழு நல்லூர்ப் பூங்குயிலே - உந்தீபற
பொலிந்திடும் வாழ்வு புகழுடனென்றே - உந்தீபற

திருமதி - த. சபாநாதன்
நயினாதீவு

## வீறோடு வாழ்கின்ற வீட்ருளே!

தேரிலே ஏறிடும் சீர்நல்லை மேவும் திருமுருகா
ஊரெலாங் கூடியே உன்பதம் பற்றிநின் றோதுகின்றோம்
யாரென்ன கேட்கினும் நாமொன்றை உன்னிடம் வேண்டுகின்றோம்
வேருற்ற மண்ணிலே வீறோடு வாழ்கின்ற வீடருளே

சி. சிவசரவணபவன் (சிற்பி)

## வடம் பிடிப்போம் வரம் பெறுவோம்

வடம் பிடித்து தேர் இழுக்கும்
பக்தர்களின் கலி தீர்த்து
வேண்டும் வரம் தந்திடவே
வள்ளி தெய்வானையுடன்
மணவாளக் கோலத்திலே
குமிண் சிரிப்போடு
சுப்ரமணியன் வரும் காட்சி
கண்கொள்ளாக் காட்சியே...!

மகேந்திரலிங்கம் -நிரோஷனா
கோப்பாய்

## தேரேறி வந்திடுவாய்

தேரேறி வருகின்றாய் முருகா தேரடித் தத்துவம் நாமறிவோம்
உன்னை நம்பி வந்தோம் முருகா உன் தாளைப் பணிகின்றோம்
எம்மவரின் துயர் போக்கி எல்லாமே உந்தன் அருளுமாகி
எல்லையற்ற உன் கருணைக் கடலில் எமை ஆழ்த்திடுவாய்

திருமதி ஜெ. இராசநாயகம்
திருநெல்வேலி

## நாடிடும் அடியவர்க்கு நல்லருள்புரிவான்

அழகு ரதத்தினிலே அடியார்க்கு அருள்புரிய
ஆறுமுகப் பெருமானார் ஆடி அசைந்து வரும் காட்சி
இதயத் திருந்திடவே இருவினைகள் தானகலும்
ஈடிலாப் பெருமையுடன் ஈடேற்றம் பெற்றிடலாம்
உளமாரப் பக்தியது உள்ளத்தில் நிறைந்துவிட
ஊரெலாம் கூடி ஊக்கமாய் வடந்தொட்டு
எத்தவம் செய்தோமென எம்பெருமானை வேண்டி
ஏதிலாப் பெருமையுடன் ஏற்ற மிகக் கொண்டு
ஐயமில்லாப் பேரருளால் ஐக்கியம் நிலைத்திடவே
ஒன்று பட்ட மனதினராய் ஒப்புயர்வு தான் வேண்டி
ஓங்கார வேலவனை ஓதியே உள்ளத்திருத்தி
ஔவைக்குக் காட்சி தந்த அழகன் முருகனை
துன்பமெலாம் நீங்கத் துணையாக வேண்டுகின்றோம்

நீர்வைமணி

## வரமருள்வாய்! நல்லூர் வடிவேலவனே!

அருவுருவத்திருமேனி யெனும் வேலவனே!
உருவமொருவனெனக் கூறும் முருகனே!
எரியும் தீயில் ஒளியின் வடிவானவனே!
பல்லுயிரையும் காத்தருளும் கந்தனே!
நல்லூரில் குடிகொண்ட ஞானவேலவனே!
திருத்தேரிலின்று பவனிவரும் ஆறுமுகனே!
வணங்க வருமடியவர் பாவங்களை யழித்து
வரம் அருள்வாய் நல்லூர் வடிவேலவனே!

மாருதி - ஆவரங்கால்

## எப்போது மீள்வோம் ஊரிற்கு

தேரேறி இடர்தீர்க்கும் நின்
திருக் கோலம் காண - நல்லைக்கு
ஓடோடி வருவோமே முருகா
பாவிகளாய் ஆனோமே இன்று
அகதிகளாய் அநாதைகளாய் முகாம்களில்
முள்ளுக் கம்பிக்குள் முகம்புதைத்து அழுகிறோமே

நல்லைப் பதிதனில் நாமெல்லாம் தேரிழுத்து
வேப்ப மரநிழலில் கூடிக் கதைபேசி
இன்புற்று இருந்த நாளை
எண்ணிப் பார்க்கையிலே நெஞ்சம்
ரணத்தின் வலி கொண்டதே - முருகா
எப்போது மீள்வோம் ஊரிற்கு

அ. யசிகரன்

# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009




"நல்லூர் கந்தனே நலிவுற்றிருக்கும் எமக்கருள் தருவாயே"

சகல விதமான றேடியோ,கசற் றெக்கோடர், வோக்மன் , சொனி, பனசொனிக் கலர் TV டிஸ் அன்ரனா றிசிவர், றைஸ்குக்கர், காஸ் குக்கர், பிறசர் குக்கர், சாச்சர் லைற், சகலவிதமான வூபர்ஸ், வவல்ஸ், மண்ணெண்ணெய் குக்கர்கள் மற்றும் அன்பளிப்பு அலங்கார பொருட்கள் அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்.

## நியூ சிற்றி றேடர்ஸ்

319A, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம். (சி-3070) தொ.பே. 021 222 3226


## இன்றெமக்காய் தேரேறும் நல்லூரா

தேவர் சிறைமீட்ட தீந்தமிழ்த் தெய்வமென்று
ஆவலொடு நின்னடியேம் நிற்கின்றோம்- பூவுலகில்
நங்கட்காய் இன்றொருகால் நல்லூரா தேரேறி
மங்கலமாய் வாரீர் மகிழ்ந்து

அன்றுதே ரில்நீ அசுரர்க் கருள் சுரந்தீர்
இன்றெமக்காய்த் தேரேறும் நல்லூரா என்றுமே
குன்றிடாத் தீர்வுங் குறைவிலா நல்வாழ்வும்
நன்றாய் அருள்வீர் நயந்து

நா.புவனசுந்தரம்

## நல்லூரின் வடிவழகா



நல்லூரின் வடிவழகா!
நாம் போற்றும் திருமுருகா!
தேரேறி வந்துவிடு -நாம்
செய்தவினை போக்கிடவே!
வானத்து வீதியிலே
தேவர்களும் வந்து விட்டார்
மோனத்தில் நின்று உனை

மலர்தூவிப் போற்றுகின்றார்
மாநிலமும் எழுந்ததையா
மஞ்சள் நிலா உனைக்காண!
பூமனத்தால் போற்றுகிறோம்
புதுவாழ்வு தந்திடவா!

திருமதி ஜெ.கந்தவேள்
கொக்குவில்.


"நல்லூரான் ஆசி அனைவருக்கும் கிடைக்கட்டும்"



## லாவண்யா பல் மூக்குக் கண்ணாடி அகம்



வடமராட்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை தினமும் திறந்திருக்கும்.
மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப்பற்கள், மிதப்புப்பற்களுக்கான நிரந்தர கிளிப் அனைத்து விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

552, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை முன்பாக)

கிளை: பருத்தித்துறை வீதி,நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)

தொ.பே -021 222 9053 (சி-3067)

"நல்லூர் முருகனின்
திருவருள் கிடைக்கட்டும்"

யாழ். நகரில் மக்கள் போற்றும்
மகத்தான ஜவுளிகளின் மனம் கவர்
மாளிகை

## சிவ கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்





இல.41 பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3065)

"இன்று தேர்ப்பவனி வரும் நல்லூர் முருகனின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்"

சகல விதமான பலசரக்குப்
பொருட்களையும் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள

## றூபா பண்முக வர்த்தகம்



இல.104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3066)

"ஆறுமுருகனின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கட்டும்"



குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க
நகைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## கிருஷ்ணா நகை மாளிகை
## கிருஷ்ணா அடகுக் கடை



இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

இல. 370 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3069)

"நல்லூர் வேலவனின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகிறோம்"



## தரன் மோட்டோர்ஸ்



**Dealers in motor spare parts & Accessories**
**Inclusire body Decorative**
**Stickers & Badges for all type of vehicles**

Jaffna Road, Manipay
T.P.077. 3564361
(சி/3068)

# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009

## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



தொல்வினை தீர்க்கும் நல்லைக்கந்தனுக்கு இன்று இரதோற்சவம். அழகன் முருகன் வள்ளிதெய்வானையுடன் ஷண்முகப்பெருமானாக இரதத்தில் ஆரோகணித்து வருகின்ற அற்புதக்காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.

வருடாந்த மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். தேவர் சிறை மீட்டு குறைதீர்த்த குமரன் இன்று கோலாகலமாக சித்திரத் தேரிலே சிங்காரப் பவனி வருகின்றான்; துன்பங்களை அழித்தொழிக்கின்றான்.

அடியார்க்கருளும் ஆறுமுகப்பெருமான் இரத மேறிவந்து அருட்காட்சி தரும் பொன்னான நன்னாள் இன்றாகும். வழிபடும் அன்பர் குறைதீர்த்து நிறையருள் பாலிக்க வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இதுவரைகாலமும் பட்ட துன்ப துயரங்கள் நீங்கப் பெற்று இனிமேலாவது எல்லோரும் சுகமே வாழ வேண்டுமென நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்

"என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.**
**இரண்டாவது குருமகா சந்நிதானம்.**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் யாழ்ப்பாணம்**

## மன்னுயிர்கள் நலம் பெறவே அருள்வாயே

மணி குலுங்க சேவற்கொடி ஆட அழகுசேர் ரதமசைய
பன்னிருகை வேலவன் தேவியர் துணையிருக்க
திருவீதி தனில் பவனி வருகிறான்
காண்டா மணி ஓசை ஓம் ஓம் என்றொலிக்க
கருணைசுவர் முகங்கள் ஆறும் பொற்சுடரென
ஜொலிக்க– ஆறுமுக்ன் தேருந்து வருகிறான்
கருணைகொண்டே அடியவரை காக்கிறான்
எப்பொழுதோ முடிந்த கதை– ஒரு
பொல்லாப்பும் இல்லையென்றியம்பியோன்
வில்வ மரத்தடியில் உன் எழில்காண
காத்திருப்பான் –காண்பாய் ஐயா குமரேசா
மன்னுயிர்கள் நலம் பெறவே அருள்வாய் சண்முகனே

S.P.மணி ஆனைப்பந்தி

## பாரம் உனக்கப்பா பார்த்திரங்க வேண்டுமப்பா

நல்லையம் பதியமர்ந்து நலமருள் திருக்குமரா
வெற்றிக்கொடியசைக்க வீற்றிருக்கும் வேல்முருகா
அவ்வைக்கு அருள்சுரந்த அயில்வேல் முருகா
தேவர் துயர் தீர்த்து தெய்வயானையை மணந்தவனே
ஓம் என்னும் பிரணவப் பொருளை உரைத்தவனே
உம்பர் தொழுதேத்தும் உமையாள் புத்திரனே
பல்லாயிர முயிர்தோறும் நீக்கமற நிறைந்தவனே
பாரம் உனக்கப்பா பார்த்திரங்க வேண்டுமப்பா
நம்பிநாராயணன் தங்கை அபிராமி புத்திரனே
தும்பிமுகன் சோதரனே நம்பிவந்தோம் காருமையா

கலாபூஷணம் மு.தணிகாசலம்,
கற்கோவளம்

## நல்லைத் திருக்குமரா! தேரேறி இன்று நல்லருள் நலம் பொழிவீர்

பேர்மிளிர் நல்லைநகர்ப்
பெரும்புகழார் திருத்தலத்துப்
பார்மிளிர் பாலமுருகோனே !
பகவதிபயந்த பாலகனே!
சீர்மிளிர் வட இலங்கைச்
சிவநெறிசேர் நல்லூரிலின்று
தேர் ஏறித் திருவீதிவருமெந்தம்
திருக்குமரா! திருவருள் பொழிவீர்!

தே.சுகிர்நாகேந்திரா, அரியாலை

## தேரேறி வருகிறான் வடிவேலன்



தேரேறி வருவாயப்பா முருகா
தேசநலன் காப்பாயப்பா முருகா
ஊர்கூடி வந்ததப்பா முருகா
உரிமைகளை தந்திடப்பா முருகா
ஆரோடு நோவோமப்பா முருகா
ஆர்க்கெடுத் துரைப்போமப்பா முருகா
வேரோடு துயரறுப்பாய் முருகா
விடிவொன்றை தந்திடப்பா முருகா

திருமதி சே.பாக்கியநாதன்,சுழிபுரம்



## யாரோடு பேச வந்தோம் முருகா ?

தேரோடும் வீதியிலே நீரோடும் விழிகளுடன்
யாரோடு பேசவந்தோம் முருகா? கொடுஞ்
சூரோடு பகை முடித்த குமரா! (தேரோடும்)

ஊரோடு உறவிழுந்து உள்ளதெல்லாம் தானிழுந்து
சீரான வாழ்விழுந்து செய்வதறியாமல் நின்று
(தேரோடும்)

நெஞ்சமெல்லாம் நீயாக நிம்மதியை நாடிநின்று
தஞ்சமென வருவோர்க்கு தாயாக அருள்வாயென்று
(தேரோடும்)

வேரோடி நிமிர்ந்ததெல்லாம் வீழ்ந்துவிடக் கண்டிருந்தும்
ஊர்கூடித் தேரிழுக்கும் உன்னதங்கள் மாறாமல்
(தேரோடும்)

பஞ்சம்பிணி நோய்பகைமை பதவிவெறி சுயநலத்தால்
அஞ்சுகின்ற இழிநிலையும் அழிந்துவிடச் செய்வாயென்று
(தேரோடும்)

கள்ளிச்செடி மீதினிலே முல்லைமணம் காணுகின்ற
உள்ளம்வளர் நல்லவர்கள் ஓடியோடி வாறாரென்று
(தேரோடும்)

கொஞ்சிவரும் தென்றலிலே குளிர்நிலவின் தழுவலிலே
பஞ்சமின்றிவாழ்ந்தமண்ணின் வரிசைகெட்டுப்போனதென்று
(தேரோடும்)

ஆறுமுக சாமியென்று அழகுரதம் மீதுவந்து
நீறுபட வெவ்வினையை நீயழித்து விடுவாயென்று
(தேரோடும்)

செ.திருநாவுக்கரசு, அல்லைப்பிட்டி-1

## நல்லை திருமுருகன் தேர்விழாக் காண்போம்

கலியுகவரதனாகிய நல்லைக் கந்தப்பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா. தேர்விழாவின் தத்துவம் மிக உயர்ந்தது."ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய" என்கிறது கந்தபுராணம்.

நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்கு 170 வருடம் முந்தியது கந்தபுராணம் என்பார் பண்டிதமணி அவர்கள்.

நல்லைக் கந்தப்பெருமானின் பெரும் புகழை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயர், உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்,மட்டுவில் ஐயாத்துரை ஐயர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், இருபாலை சேனாதிராஜ முதலியார், கோப்பாய் சபாபதி, நாவலர் போன்ற செந்தமிழ் இலக்கணப் புலவர்கள் பாடியும், எழுதியும் உள்ளார்கள்.

முதலியார் குல சபாநாதன் எழுதிய வரலாற்று நூலே தேவஸ்தான வெளியீடாக வெளிவந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நல்லூருக்கு ஏற்பட்ட சம்பவங்களை செங்கைஆழியான் போன்றவர்கள் வரலாறு தந்துள்ளார்கள்.

இன்றுவரை பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் நல்லைக்கந்தன் பெரும் புகழை பாடியும் எழுதியும் உள்ளனர். உரும்பிராய் செ.தனபாலசிங்கம் அவர்களின் பங்களிப்பு தனித்துவமானது.

நாவலர் பெருமான் தெற்கு வீதியில் மடம் அமைத்து திருஞானசம்பந்தர் குருபூஜை செய்து மகேஸ்வரபூஜையும் செய்தார். சிவத்தமிழ்ச்செல்வி அம்மா நல்லூர் வடமேற்கு வாயில் துர்க்காதேவி மணிமண்டபம் அமைத்து அடியார்களுக்கு அன்னதானம் செய்தார்.இந்த இருவரும் நல்லைக்கந்தன் மீது அளவுகடந்த பக்திகொண்டவர்கள். இச் சந்தர்ப்பத்தில் நக்கீரர் தந்த திருமுருகாற்றுப்படையை ஓதி மனக்கவலை மாற்றும் மாமருந்தாகிய நல்லைத் திருமுருகனைப் போற்றி வழிபாடு செய்வோமாக.

கா.சிவபாலன்

## தேர் வடம் பிடிப்போம் வாரீர்

ஊரில் உள்ளோர் ஒன்று சேர்ந்து
தேர் வடம் பிடிப்போம் வாரீர் –என்றும்
நல்லூரான் மனதில் இடம்பிடிப்போம் வாரீர்
சித்தர்கள் கால்தடம் பதித்த வீதியில்
பக்தர்கள் நாம் பக்தியுடன் தேரிழுத்தால்
முத்தர்கள் ஆகலாம் வாரீர்

எஸ்.கே.மனோகரன் ,சுன்னாகம்

# ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி -முருகன் தேறுதலைத் தந்து தேசநலன் காக்க தேரேறி வருகிறான்

முத்தமிழால் வைதாரை வாழவைப்பவனாக வலிமையும், அழகும், அருளும், அன்பும் பொருந்திய பெருங்கடவுள் என கந்தபுராண காவிய நாயகனாக "சூரனுடலற வாளி சுவறிட வேலைவிடவல பெருமான்" எனும் திருப்புகழ் நாயகனாக தாரகன், சிங்கன், சூரன் செருக்கடக்கிய செம்மலாக "சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்" என்ற வரிகளுக்கு இன்று தனிப் பெரும் தெய்வமாய் உமையாள் பயந்த இலட்சியமாக சரவணத்தில் உதித்த ஆறுமுகவனாக, திருத்தணிகை, பழனி, திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருச்சீரலைவாய், திருப்பரங்குன்றம் எனும் ஆறுபடை வீடுகளிலும் அமர்ந்தருள் புரியும் ஈசனாய் அழகிய சித்திரத் தேரிலே ஆறுமுகத்தோடு அபய கரம் காட்டி தேறுதலைத் தந்து தேசநலன் காக்க நல்லூரான் தேரேறி வருகின்ற திருக்காட்சி அற்புதக் காட்சியாக அமைகின்றது.


இன்று நல்லையம்பதி இந்திரவிழா போலக் காட்சியளிக்கின்றது. எந்த மயமும் கந்த மயமாகவே இருக்கிறது. முருகப்பெருமான் தன்னுடைய ஆறுமுகக் கோலத்துடன் தேரேறி எழுந்தருளி வருகிறான். சிவபெருமானுடைய ஐந்து முகமும் உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது ஒன்று.

இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுக நாதனாக திரு அவதாரம் செய்தார் என்பது மற்றொன்று. நான்கு திசையும் மேல், கீழ் என்ற இரண்டும் ஆக ஆறு இடங்களிலும் எம்பெருமான் திருவருட் பார்வை செல்கின்றது என்பதை அவனுடைய ஆறுமுகங்களும் நமக்குச் சொல்கின்றன.

ஆறுமுகத் தத்துவம் மிகப் பழமையானது. மிகப் புதுமையானது. எல்லாக் காலத்திற்கும் உரியது. அதுவே ஆதியானது, அந்தமானது, இன்னொரு வகையாக ஆதியும் அந்தமும் அற்றது. இத்தகு பெருமைகளைக் கொண்ட ஆறுமுக சுவாமியே இன்று அடியார்களை அரவணைத்துக் காத்து இரட்சிப்பதற்காக தேரேறி வருகிறான்.

### தேரின் மகிமை

உற்சவம் இறைவனது ஐந் தொழிலின் தத்துவத்தை



உள்ள டக்கியுள்ளது.படைத்தல், காத்தல், அழித்தல்,அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களின் உண்மைகளைப் புலப்படுத்தி நிற்பது மகா உற்சவமாகும். ஒரு கிராமத்தில் உள்ள ஆலயத்தில் தேர்த்திருவிழா என்றவுடன் அக்கிராமமே விழாக் கோலம் கொண்டுவிடுவதோடு மக்களது உள்ளங்களிலும் புதுப்பொலிவு பெற்றுவருகின்றது.

சிறியோர் முதல் பெரியோர் வரை எந்தவேறுபாடுகளுமின்றி எம்பெருமான் தேரேறி அருள்பாலிக்கும் தெய்வீகக் காட்சியில் லயித்துவிடுவர்.

மஹோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த்திருவிழா இறைவனுக்குரிய சிறந்ததொரு இராஜோபகாரமாகும். இறைவனது திருமேனியைத் தாங்கி இத் தேரானது ஆலய வீதியில் அசைந்தாடிச் செல்கின்றது.

ஊர் கூடித் தேர் இழுத்தல் என்ற முதுமொழிக்கேற்ப அனைத்து மக்களும் எத்தகைய வேறுபாடுகளுமின்றி வடந்தொட்டு தேரை இழுத்து வருவது ஓர் உன்னதமான காட்சியாகிறது.

தேர் இருப்பிலிருந்து புறப்பட்டு மீண்டும் இருப்பிற்கு வரும்வரை அடியார்கள் அரோகரா கோஷமிட்டு தமது மனமகிழ்ச்சியையும் பக்தியுணர்வையும் வெளிப்படுத்துவர்.

இத்தகு பெருமைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தேர்த் திருவிழாவானது மஹோற்சவங்களில் சிறப்பிடம் பெறுகின்றது.

இத்தகு சிறப்புக்களை இன்று நல்லையம்பதியில் காணமுடிகின்றது. ஈழத்தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வினை தேரேறி அருள் பாலிக்கும் முருகப்பெருமான் தந்தருள வேண்டுமென எல்லோருக்கும் இந்நாளில் பிரார்த்திப்போமாக.

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலான சகல பாடப் புத்தகங்களும் அப்பியாசப் புத்தகங்களும் மற்றும் பாடசாலை உபகரணங்களும் மலிவான விலையில் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நகரின் மத்தியில் நாட வேண்டிய நல்லதோர் நூலகம்



தென்னிந்திய சஞ்சிகைகள், வாழ்த்து மடல்கள் காலத்திற்கு ஏற்ப கலண்டர்கள், டயறிகள் யாவற்றினதும் உறைவிடமும் இதுவே.



## பூபாலசிங்கம் புத்தகசாலை

யாழ்ப்பாணம் – கொழும்புப் புதினப் பத்திரிகைகள் அனைத்தினதும் பிரதான முகவர்களும் இவர்களே!



04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 6693

---

அனைவருக்கும் முருகனின் அருள் வேண்டி நிற்கின்றோம்




நாளெல்லாம் புத்துணர்ச்சியுடன் இருக்க ... அருந்துங்கள் அண்ணா கோப்பி வளரும் குழந்தைகளுக்கும் , கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறந்த போசாக்கு மிக்க உணவு தயாரிக்க அண்ணாவின் தயாரிப்புக்கள் இன்றே நாடுங்கள்.

# அண்ணா தொழிலகம்

இணுவில்

---


இன்று தேரேறி வரும் நல்லூர் முருகனின் ஆசி அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்



## ஸ்ரீ முத்துமாரி அம்மன்

## றேடர்ஸ்

பல சரக்குப் பொருட்களின்
மொத்த சில்லறை வியாபார நிலையம்.



இல. 342, 344, 346, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


---

இன்று தேரேறி வரும் நல்லூர் முருகனின் ஆசி அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்




## அச்சிட் கொடுப்பதற்கு முன் அந்த நிறுவனம் பற்றி அறிந்து கொள்ளவும்

1) நவீன கணனி
2) A3, A4 லேசர் பிறிண்டர்
3) தரமான அச்சிடும் இயந்திரம்
   i) DAVIDSON (701D)
   ii) HEIDELBERG (KORA, KORD, KORS)
4) புத்தகம் கட்டுதல், வெட்டுதல் வசதி
5) லெமினேற்றிங் வசதி
6) தொழில் அனுபவமுள்ளவர்கள் வேலை செய்கிறார்களா?




எல்லா வளமும் நிறைந்த தேசிய தொழில் தகமையுள்ள அச்சகத்தில் உங்கள் வேலையை ஒப்படைத்தால் கவலை வேண்டாம் உரிய நேரத்தில் உங்கள் வேலை செய்து பெற்றுக்கொள்ளலாம்.



## பிள்ளையார் அச்சகம்

676, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009




"தேரில் பவனிவரும் வேல் முருகா உன் அருள் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகிறோம்"

DELMEGE - மில்க்றோ , பேக்கிங் பவுடர், ஜாம்,ஐசிங் சுகர், ரின்மீன், TVP சோயாமீற், ஜலற்றீன், புடிங், நூடில்ஸ், கஸ்ராட் பவுடர், கரமல், வட்டிலப்பம்,கொக்கோ பவுடர்
சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்



## ஸ்ரீ றங்கன் என்ரப் பிறைஸ்

Lanka Milk Food
Dairy Farm
Corn Flakes
My Juice
Farleys Rusk 60 g
Farleys Rusk 150 g
Casilian 120 g
Casilian 250 g
கப்பிகவ் சீஸ்
} சில்லறை சாமான் பலசரக்கு வகை

370, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.
TP-021 222 2027

"அனைவருக்கும் நல்லூர் முருகனின் அருள் கிடைக்க பிரார்த்திக்கிறோம்"

புத்தம் புதிய மோட்டார் சைக்கிளா? அவற்றிற்கான உதிரிப்பாகங்களா? மோட்டார் வாகனங்களா? பற்றரி வகைகளா? அனைத்தையும் ஓரிடத்தில் நியாய விலையில் பெற்றிட

## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்



இல-108 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
மெயின் வீதி சங்கானை.
அருள்விநாயகர் றேடர்ஸ்,
இல-106,ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

தேர் ஏறி பவனி வரும் கந்தன் அருள் கிடைக்கட்டும்

## நியூ மிதுரன் ஜீவல்லறி

New Mithuran Jewellery






ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர் ,யாழ்ப்பாணம்.

"தேரில் ஆரோகணிக்கும் நல்லூர் முருகனின் அருள்வேண்டி நிற்கின்றோம்"



## வெங்கடேஸ்வரா



உலக பிரசித்திபெற்ற இங்கிலாந்து தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட 12 வருட உத்தரவாதம் கொண்ட Raleish சைக்கிள் யாழ் .ஏகவிநியோகஸ்தர்கள் ஆண், பெண் இருபாலாருக்குமான துவிச்சக்கரவண்டிகள் உண்டு. அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் அனைத்தையும் பெற்றிட நாடுங்கள்.

இல 125A ,127 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பலசரக்குப் பொருட்களை நியாய விலையில் பெற நாட வேண்டிய ஸ்தாபனம்

## க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்



## பல்பொருள் வாணிபம்

இல 318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

"தேர் ஏறி வரும் முருகன் சகல மக்களுக்கும் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்"

கொப்பறா, எள்ளு, இலுப்பை, வேப்பம்விதை, கச்சான் போன்றவற்றை எண்ணெய் ஊற்றிக் கொடுக்கப்படும். அத்துடன் சிறந்த தேங்காய் எண்ணெய் பெற்றுக்கொள்ளலாம்.

## K.T.M. எண்ணெய் மில்

பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு

# நல்லைக் குமரன் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 19.08.2009


சுவாமி நாதனே உன் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்.

**கதிரவன் நகையகம்**

தங்க நகை வியாபாரம்

188, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 9315

**ஸ்ரீ நதியா நகை மாளிகை அன் டிஜிட்டல் கலர் லாப்**



108A, லக்சன் பிளாசா கட்டடம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 8412

56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 6744

01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 2709

யாழ் மற்றும் வடபகுதி மக்களின் நம்பிக்கைக்கு என்றுமே பாத்திரமாக விளங்குவது...

**டியூரோ**

பீ.வீ.சி. குழாய்களும் அதன் பொருத்துகளும்

Duro SINCE 1980 30 YEARS OF EXCELLENCE

SLS 935 SLSI SYSTEM ISO 9001 CERTIFIED SLS 147





அனைத்து விதமான எலக்ரிக் பொருட்கள், பைப் வகைகள் என்பவற்றை சில்லறையாகவும் மொத் தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

AHIEZER SUPPLIERS
DURO JAFFNA OPERATION CENTER

யாழ் முகவர்:
**AHIEZER SUPPLIERS**
Jaffna Distributor Centre
289, கலட்டி சந்தி,
கலட்டி, யாழ்ப்பாணம்

அகிலத்தின் நாயகனே! உன் அருள் நாடி நிற்கின்றோம்
இதோ 171 ஸரானல வதயல ....

# S.P.N. Motors



உங்களது நன் மதிப்பு பெற்ற பீறிடம் எல்.எம்.எம். ஸ்கூட்டர் சைக்கிள் விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள




Pulsar 180
CT 100
Discover

**எஸ்.பி.என் மோட்டர்ஸ்**

171, ஸ்ரானல்' வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

KMH MITSUI CEMENT PEPSI



**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**



147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021 222 2833, 021 222 7144

தேரேறி வரும் நல்லூர்க் கந்தனே உன் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

யுனிலிவர் ஸ்ரீலங்கா லிமிற்வெட் எனேர் ஐ.ஸ்சர் லங்கா லிமிற்வெட் பொண்ரேறா பிறான்ட் லங்கா (பிறைவேற்) மலிபன் பிஸ்கட் உற்பத்தியாளர் லிமிற்வெட் செல்காஸ் லங்கா லிமிற்வெட் U.S.A சமையல் எண்ணெய் இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்

**எஸ்.வி. முருகேசு**



தொ. பே. 021 222 2911
021 222 2202

154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அகம்பாவம் ஒரு பொல்லாத குதிரை. அதுதன் எஜமானனை ஒருமுறையாவது கீழே தள்ளாமல் விடாது. – ஸ்கட்லாந்து

## வலம்புரி

## கோழிக்குள் முட்டைவைத்து முட்டைக்குள் கோழிவைத்து இருப்பான் ஒருவன் அவனைப் புரிந்தால்...

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டென்பது தமிழ்ப் பழமொழி. இந்த உலகை ஆண்ட மகா மன்னர்கள் கூட முடிவில் சாம்பராய்–மண்ணாய் போவர் என்பதே நியதியும் நிஜமும் ஆகும்.

எனினும் இந்த உண்மையை யாரும் உணர்ந்திலர். அவ்வாறு உண்மை உணரப் பெறின் அது ஞானநிலைக்கு நம்மை இட்டுச் செல்லும்.

இன்று உலகெங்குமுள்ள ஆட்சியாளர்கள் தனித்து இராஜ தந்திரத்திலும், அரசியல் வியூகத்திலுமே நம்பிக்கை வைப்பவர்களாக உள்ளனர்.

இதனால் தெய்வீகம்–பாவமழி–தர்மம் என்ற கருத்துக்களுக்கு இடமில்லாமல் போயிற்று.

இதன் காரணமாக செயற்கை அழிவுகள் தலைவிரித்தாடுகின்றன.

மனிதகுலம் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்காக அழகான இந்தப் பூமியை இறைவன் ஒழுங்குபடப் படைத்துத்தந்தான். ஆனால் அதனை நாம் சின்னாபின்னப்படுத்தி சீரழித்து விட்டோம்.

ஒருவன் துடிதுடித்து இறப்பதை பார்த்து இன்னொருவன் மகிழ்வடைகின்றான்.

தாய் ஒருத்தி தன் தனயனை இழந்து தலையிலடித்து புலம்பும் போது, இன்னொரு பக்கத்தில் சிரிப்பொலி கேட்கின்றது.

ஒருவரின் இழப்பில் இன்னொருவர் மகிழ்வடைவதென்பது ஒருபோதும் ஏற்புடையதல்ல.

பதவிகள், அதிகாரங்கள் அனைத்துமே இறைவனால் தரப்படுபவை.

அதனை நாம் துஷ்பிரயோகம் செய்யும் போது இறைவன் அதனை கட்டுப்படுத்தும் கட்டாயத்திற்கு ஆளாகின்றான்.

இது யதார்த்தம். உலகின் அன்றைய புராண வரலாறுகள் முதல் இன்றைய நிகழ்வுகள் வரை இத்தத்துவத்தையே நினைவு படுத்துகின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்திரிகாவின் காலத்தில் ஓரம் கட்டப்பட்டிருந்தார். இதே மகிந்த ராஜபக்ஷவே ஜனாதிபதியாகப் போகிறார் என்பதை சந்திரிகா அம்மையார் உணர்ந்திலர்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில்–மகிந்த போட்டி, ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பதென தீர்மானிக்கப்படுகிறது.

அந்தத் தீர்மானத்திற்குள்தான் பேரழிவு உள்ளதென்பதை எவரும் உணரவில்லை.

உணர்ந்தவர்களின் கருத்துக்களும் எடுபடவில்லை. இப்படியே ஒருபெரும் நிதர்சனத்தைத் தந்தால்,

அப்பாவித் தமிழரின் அழிவுக்கு–முகாம் வாழ்வுக்கு என்ன கூறுவீர் என்று உதட்டுக்குள் உங்கள் நா உரைப்பது கேட்கிறது.

ஆம்! அதற்கும் விரைவில்... மிகவிரைவில் தர்மம் வெல்லும் என்பதைப் பதிலாகத் தரலாம்.

முகாம் மக்களை விடுவித்து, தமிழர்களுக்கான அனைத்து உரிமைகளும் கிடைக்கக் கூடியதான தீர்வை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்குவாராயின்... அதுவே நீதியாகும்.

மாறாக மக்கள் வேதனையும் கண்ணீரும் விடும் பழி தொடருமாயின் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இறைவன் தூண்டி விடுவான்.

அதன் பின்னர் நிலைமை எப்படி என்பதை நான் கூறாமல் விடுத்து நீங்கள் நேரில் காணுங்கள் அதுவே சுகம்.

## வன்னி மக்களுக்கான
# 4 ஆம் கட்ட நிவாரணப் பொருள்களை ஐ.நாவிடம் கையளித்தது இந்தியா

(கொழும்பு)

போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு என இந்தியா வழங்கிய நான்காவது தொகுதி நிவாரணப் பொருட்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்தால் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நெய்ல் புனேயிடம் கையளிக்கப்பட்டது.

3 மில்லியன் டொலர் பெறுமதியான 600 தொன் நிவாரணப் பொருட்களே கையளிக்கப்பட்டன. கடந்த 8 ஆம் திகதி இவை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்திருந்தன. அதில் 6 இலட்சம் தொகுதி பலசரக்குப் பொருள்கள், சமையல் பாத்திரங்கள், நெகிழி விரிப்புகள், சிறுவர்களுக்கானவை உள்ளிட்ட துணிமணிகள், காலணிகள், சுகாதாரப் பொருட்கள் என்பன அடங்கியுள்ளன.

பெரும்பான்மையான பொருள்கள் வடக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 80 ஆயிரம் குடும்பங்களின் தேவையை நிறைவு செய்வதற்குப் போதுமானவை என்று இந்திய அதிகாரிகள் கூறினர்.

பொருள்களை விநியோகிப்பதற்கு ஐ. நா. மற்றும் இலங்கை வழங்கிவரும் ஆதரவுக்கு இந்தியா நன்றி பாராட்டியுள்ளது. மக்களின் மீள்குடியமர்வுப் பணிகள் விரைவாகத் தொடரும் என்று இந்திய அரசு எதிர்பார்க்கின்றது என்றும் அவர்கள் கூறினர்.

இந்தியா வழங்கிய பொருள்கள் வரும் வாரங்களில் விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஐ. நா கூறியுள்ளது. அரசின் 180 நாட்கள் திட்டத்தின் கீழ் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்படும் குடும்பங்களுக்கு இந்தப் பொருட்களை வழங்குவதிலேயே அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் ஐ. நா. அதிகாரி கூறினார்.

இந்தியாவின் பங்களிப்பு இன்றைய நிலையில் மிக முக்கியமானது. வழங்கப்பட்டுள்ள பொருட்கள் முகாம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுவதுடன் ; வீடுகளுக்குத் திரும்புபவர்களுக்கும் பயன்படும் என்றார் ஐ. நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நெய்ல் புனே. (ச – 5)

# வன்னியில் மழை தொடர்ந்தால் முகாம் நிர்வாகம் சீர்குலையும்
## ஐ.நா.எச்சரிக்கை

(கொழும்பு)

வன்னியில் மழை தொடர்ந்தால் முகாம்களின் நிர்வாகம் கட்டுப்பாட்டை இழந்துவிடும் என்றும் அது பின்னர் பாரியளவிலான பாதுகாப்புப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

மூன்று நாட்கள் பெய்த மழை காரணமாக முகாம்களில் உள்ள 16 ஆயிரம் பேருக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக மெனிக்பாம் முகாமில் உள்ள மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். இந்த நிலைக்கு அரசு ஐ.நா. மீது பழி சுமத்தியது. ஆனால் அதனை ஐ.நா. மறுத்திருந்தது.

இந்த நிலையில் முகாம் நிலைவரம் தொடர்பாக ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையை சி.என்.என். செய்தி நிறுவனம் பெற்றுள்ளது.

அந்த அறிக்கையின்படி மூன்று நாட்கள் தொடர்ச்சியாக பெய்த மழையினால் மெனிக் பாம் முகாமில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான தங்கும் இடங்கள் (கொட்டகைகள், கூடாரங்கள்) அழிந்துவிட்டன அல்லது சேதமடைந்து விட்டன.

சேறும் சகதியுமான பகுதிக்குள் சோகத்துடன் இருக்கும் மக்களினதும் வெள்ளத்தால் நிரம்பி வழியும் மலசல கூடங்களை விட்டு நீண்ட தூரத்திற்கும் ஒதுங்கிப்போகும் மக்களினதும் படங்கள் அந்த சுற்றறிக்கையில் காணப்படுவதாக சி.என்.என். தெரிவிக்கின்றது.

கடந்த 14 ஆம் திகதி பெய்த கடும் மழையால் பல கூடாரங்களும் மலசல கூடங்களும் நீருக்குள் மூழ்கிவிட்டன அல்லது சேதமடைந்து விட்டன என அந்த சுற்றறிக்கை கூறுகின்றது. இந்த வெள்ளம் வழக்கமாக பருவ மழை தொடங்கும் காலத்துக்கு முன்பாகவே வந்துவிட்டது. ஒக்ரோபர் முதல் ஜனவரி வரையான மாதங்களில் இலங்கையின் வடக்கு–கிழக்கு பகுதிகளுக்கான தீவிர பருவமழைக் காலம்.

மழை தொடர்ந்தால், தொடரும் போன்றுதான் தெரிகிறது. பின்னர் மொத்த நிலைமையும் நிர்வாகத்தினரின் கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிடக்கூடும். அத்துடன் பாரியளவிலான பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்திவிடக்கூடும் என ஐ.நாவின் அந்தச் சுற்றறிக்கை எச்சரிக்கின்றது.

எனவே எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆலோசிப்பதும் அவற்றை உருவாக்குவதும் அவசியம் என்றும் அது தெரிவித்துள்ளது. மழைகாரணமாக ஆயிரம்பேர் வரையிலானோரே பாதிக்கப்பட்டனர் என்றும் அவர்கள் உயரமான வேறு இடங்களுக்கு உடனடியாக மாற்றப்பட்டு விட்டார்கள் என்றும் மீள்குடியமர்வு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரிசாட் பதியுதீன் கூறியிருந்த நிலையில், 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. கூறியிருப்பது கவனத்திற்குரியது. (ச–5)

# உயர்தர உயிரியல் பாட வினாக்கள் கசிவு?

(கொழும்பு)

தற்போது நடைபெற்று வரும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை வினாக்கள் முன்கூட்டியே கசிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிரியல் பரீட்சை தாளின் ஆறு வினாக்கள் மாத்தறை பிரதேச தனியார் வகுப்பொன்றின் மாதிரி வினாக்களாக வழங்கப்பட்டுள்ளன. பரீட்சைக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் குறித்த ஆசிரியர் இந்த வினாக்களை மாணவர்களுக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதிப் பரீட்சை வினாக்களும் மாதிரிப் பரீட்சை வினாக்களும் ஒரே மாதிரியாகக் காணப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த வினாக்களை ஆசிரியர் விசேட அடையாளமிட்டு காட்டியுள்ளதாக தேசிய ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இது குறித்து கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மாதிரி வினாத்தாள்களை வெளியிடுவதில் தவறு இல்லை எனவும் பரீட்சை வினாக்கள் கசிவது பாரதூரமான குற்றம் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ச–5)

# 19 வருடங்களுக்கு பின்னர் ஏ-9 ஊடாகப் பாடப்புத்தகம்

(கொழும்பு)

19 வருடங்களுக்கு பின்னர் ,ஏ–9 வீதி வழியாக யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான 10 இலட்சம் பாடப் புத்தகங்கள் கொண்டு செல்லப்பட உள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் இந்த பாடப் புத்தகங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விநியோகிக்கப்பட உள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் டபிள்யூ.எம். என். ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார். யாழ்ப் பாணத்திலுள்ள 5 கல்வி வலயங்களுக்கும் தேவையான பாடப் புத்தகங்கள் எடுத்துவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச–5)

# சுவாமி விவேகானந்தரின் எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்

இந்த உலகத்திற்கு அப்பால்,ஏதோ ஒன்று இருக்கிறது என்று எல்லா மதங்களும் வற்புறுத்துகின்றன. ஐந்து புலன்களில் அடங்கும் வாழ்க்கையிலேயே, ஜடவுலக வாழ்க்கையிலேயே எல்லாம் முடிந்துவிடவில்லை. இது ஒரு பகுதி மட்டுமே, மேலோட்டமானது மட்டுமே. இதற்குப் பின்னால் எல்லாவற்றிற்கும் அப்பால், தீமையே இல்லாத எல்லையற்றது இருக்கிறது. சிலர் அதைக் கடவுள் என்றும் சிலர் அல்லா என்றும், சிலர் ஜெஹோவா என்றும், சிலர் யோவான் என்றும் பலவிதமாக வழங்குகிறார்கள். வேதாந்தி அதைப்பிரம்மம் என்று சொல்கிறான்.



மதங்களின் போதனைகளைப் பார்கும் போது முதலில் நமக்குத் தோன்றுவது , நாம் வாழ்க்கைக்கு முடிவுகட்டுவதே மேல் என்பது தான். வாழ்க்கையின் தீமைகளுக்கு எப்படிப் பரிகாரம் காண்பது என்ற கேள்விக்கு, போராடிக் கொண்டிருக்கிறோம்.


கொடிய வினை தீர்த்திடும் முருகா
எம்குற்றங்கள் போக்கிடுவாய்
வறிய மக்கள் வாழ வதங்கிடாமல்
வரம் தருவாய்.
ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் பெற்றிட நாடுங்கள்.
ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை.


## விடுதலைப்புலிகள் அமை...

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது

விடுதலைப்புலிகளின் தலைவர்கள் கொல்லப்பட்டதன் பின்னர் மக்களின் நன்றிகளும் வாழ்த்துக்களும் எமக்குக் கிடைக்கின்றன. குறுகிய கொள்கைகளுடனும் அரசியல் இலாபத்திற்காகவும் நாம் இதனைச் செய்திருந்தால் இந்த வெற்றியைப் பெற்றிருக்க முடியாது. அப்படியிருந்திருந்தால் ஒவ்வொரு அழுத்தங்களிற்காகவும் இந்த நடவடிக்கையை நாம் நிறுத்த வேண்டியேற்பட்டிருக்கும் இந்த நாட்டில் சிங்களவராகட்டும், தமிழராகட்டும், முஸ்லிம் ஆகட் டும், பேகர் ஆகட்டும் அனைத்து இனங்களின் பாதுகாப்பிற்காக வும், ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவும் எமக்கு அதிகாரம் இருக்கிறது. அதில் எந்தக்குறையையும் நாம் விட்டு வைக்கவில்லை. இந்த நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளிற்கும் சுதந்திரத்திற்கும் அச்சுறுத்தல் விடுக்கும் தரப்பினர் உலகில் எங்கிருந்தாலும் இங்குள்ள தேரர்களின் ஆசீர்வாதத் தாலும் இறைவனின் ஆசியாலும் அவர்களையழிப்பதற்கு எமக்கு சக்தி உள்ளது என்று அவர் கூறியுள்ளார். (ச-14)



கலியுக வரதா
எம் கர்மவினை தீர்த்து
எம்மை நல்வழிப்படுத்திடுவாய்
நல்லையம்பதி முருகா
அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்
கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்
ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை.


## வெளிநாடு வாழ் தமிழ் மக்களுடன்...

பி.பி.சி செய்தி சேவைக்கு வழங்கிய நேர்காணலில் கருத்து தெரிவித்த பிளேக், அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தாமதப்படுவது விடுதலைப்புலிகள் மீள ஒருங்கிணைவதற்கான புதிய சந்தர்ப்பத்தை வழங்கிவிடும் என்றார்.

இலங்கை அரசு தமிழ்ச் சமூகத்தை மேலும் கவலைக்கு உள்ளாக்குவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன.

அது சில பிரிவினரை மீண்டும் சின மூட்டும் என்பதுடன் விடுதலைப்புலிகள் ஒருங்கிணைவதற்கான புதிய சந்தர்ப்பத்தையும் கூட ஒருவேளை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடும்.

எனவே இலங்கை அரசு தமிழ் மக்களுடன் கலந்தரையாடல்களை நிகழ்த்துவது மிக மிக முக்கியம்.

உள்நாட்டில் இருக்கும் தமிழர் களுடன் மட்டுமல்ல, வெளிநாடுகளில் உள்ள தமிழர்களுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும்.

அத்துடன் நாட்டில் அரசியல் கருத்து இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை களையும் விரைவுபடுத்த வேண்டும்.

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் மீள்குடியமர்வு என்பது இலங்கைக்கு வாசிங்டன் வழங்கும் நிதி உதவிகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டது.

மீள்குடியமர்வு, மீள்கட்டுமானம், வாழ்வாதாரம் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு அமெரிக்கா நிதி வழங்குவது, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக மக்களை மீள்குடியமர்த்துவதில் காட்டும் செயல் ஊக்கத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது.

இரண்டாவதாக, அரசியல் கருத்து இணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அதிகாரங்களைப் பகிர்வதற்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலும் தங்கியுள்ளது.

ஆனால், முகாம்களில் இருந்து கிளர்ச்சியாளர்களை வடித்தெடுத்த பின்னரே மக்கள் அவர்களது வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதே போன்று, எந்தவொரு அரசியல் கருத்து இணக்க முயற்சிகளும் நாட்டில் உள்ள பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர். அதற்கு நீண்ட காலம் எடுக்கும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் என்றார். (ச-5,14)

## ஆயிரத்து 380...

வங்கி மேலும் ஆயிரத்து 380 மில்லியன் ரூபாயை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் உலக வங்கி மொத்தமான 2ஆயிரத்து 760 மில்லியன் ரூபாயை வழங்க உள்ளதாகவும் நிதித் திட்டமிடல் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## இளைஞன் கைது

(கொழும்பு)

வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த வேளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆஸ்பத்திரி வீதி சங்கானையைச் சேர்ந்த கணேசலிங்கம் கஜிந்தன் (வயது-24) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். பிரஸ்தாப இளைஞர் விடுதியில் தங்கியிருந்தவேளை புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டு பூசா தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப் பட்டுள்ளதாகவும் அவரது தாயாரால் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (ச-30)

## வடபகுதி பாதுகாப்பு...

வடபகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் பலப்படுத்துவதற்கும் தான் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், தற்போது தற்காலிகமாக அமைக்கப் பட்டுள்ள வடபகுதி முகாம்கள்பலவற்றை நிரந்தரமான முகாம்களாக மாற்றியமைப் பதற்கும் திட்டமிட்டிருப்பதாகவும் மகாநாயக்க தேரரிடம் விளக்கினார்.

இடம் பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக இங்கு குறிப்பிட்ட அவர், இதற்கான நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

அவர்கள் மீண்டும் பயங்கரவாதிகளுடன் இணைந்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஜனாதிபதிக்கும் ஏனைய முக்கிய பிரமுகர்கள் பலருக்கும் இப்போதும் பயங்கர வாதிகளால் அச்சுறுத்தல் இருக்கின்றது எனவும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார்.

அவர்கள் இப்போதும் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர் நோக்கிக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

அவர்களின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக உறவு விவகாரங்களுக்கான இயக்குநரான செல்வராசா பத்மநாதன் பல உண்மைகளை இப்போது வெளியிட்டுவருகின்றார் எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார். (ச-5)

## தடை செய்யப்பட்ட இயக்...

உபயோகிப்பதும்மற்றும்நாளேடுகள், தொலைக் காட்சிகளில் அவற்றை வெளியிட்டலும், காண்பித்தலும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்று தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நேற்று வெளிட்டுள்ள ஓர் அறிக்கையில் அறிவித்திருக்கிறார்.

பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், பேரணிகள் போன்றவற்றை நடத்துபவர்கள் இதை மனதில் கொள்ள வேண்டும். இவற்றை மீறுகிறவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைமைச் செயலாளர் எச்சரித்திருக்கிறார்.

விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல். திருமாவளவனின் பிறந்த நாள்விழா சென்னையில்நேற்றுநடைபெற்றது.

இந்த விழாவையொட்டி நகரில் வைக்கப்பட்டுள்ள பல்வேறு விளம்பரத்தட்டிகளில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் மற்றும் அந்த அமைப்பின் சின்னம் இடம்பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## ஜனாதிபதித்...

அறிவித்திருக்கின்றது.

மக்கள் வழங்கிய ஆணைக்கு முரணாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு முனைந்தால் மக்களின் ஆதரவுடன் ஜே.வி.பி. வீதியில் இறங்கிப் போராடும் எனவும் இது தொடர்பாக ஏனைய கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தப் போவதாகவும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கொழும்பில் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிப் பதவி ஜனநாயகத்துக்கு விரோதமான ஒன்று. ஏன் என்றால் இதன்மூலம் கொலைகள், கொள்ளைகளை கூட தடுத்து நிறுத்தமுடியவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மகிந்த சிந்தனை என்ற கொள்கைக்கு முரணானதாக இது அமைந்திருப்பதால் ஜனாதிபதி பதவிக்கான மற்றொரு தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசுக்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் கிடையாதெனவும் சோமவன்ச அமர சிங்க சுட்டிக்காட்டினார். (ச-5)

## வெள்ளத்தால்...

மலசலகூடம் அடித்துச் செல்லப்பட்டதில் குழிக்குள் வீழ்ந்து சிறுவன் உயிரிழந்தான் என்றும் ஏனையவர்கள் மழையில் இருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் ஏதும் இல்லாத நிலையில் குளிர் அதிகமாகி இறந்தார்கள் என்றும் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கூறினர்.

அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட சேதங்கள் மிகப்பெரியவை எனக் கூறிய கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் கோர்டன் வைஸ், உண்மையான பருவமழை ஏற்படுத்தக்கூடிய சேதம் உண்மையிலேயே கவலைக்குரியதாக இருக்கிறது என்றார்.

மலசல கூடங்கள் நிறைந்து வழிகின்றன. சேறும் மனிதக் கழிவும் சேர்ந்து மக்களின் கூடாரங்களையும் பொது சமையல் இடங்களையும் ஊடறுத்துப் பாய்கின்றன எனஉதவிப் பணியாளர்கள் கூறுகின்றனர். (ச-5)


விற்பனையாகிறது
இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான 16 பக்கங்களைக் கொண்ட எதிர்பார்க்கப்படும் வினாக்களுடன்
முழு மாதிரி வினாப்பத்திரம்
விசேட வெற்றித்தேர்வு
விலை ரூபா.50.00
சகல புத்தகசாலைகளிலும் இன்றே பெறலாம்.
(நல்லூர் உற்சவகால சிறப்பு விற்பனை நிலையங்களிலும்) (C-3049)

Piano / Violin Notes
Organ, வயலின், Guitar, புல்லாங்குழல், வீணை போன்ற இசைக் கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புகள் தினமும் மாலை 4மணியிலிருந்து நடைபெறுகின்றன.
S.S.Rajeindran.
T.P. :-0713055991 (C-2933) 75,கோவில் வீதி, நல்லூர்.


19.08.2009/20.08.2009/21.08.2009
MP3 PLAYER
Orange 2 GB 2500/- 2200/-
2 GB (D... day) 3700/- 2750/-
MP5 PLAYER
Orange 2 GB (Camera) 6000/- 5500/-
Sony 2 GB 4900/- 4000/-
UPS
Techcom 650 W 4000/- 3800/-
Intex 600 W 4400/- 4000/-
DCP 650 W 4200/- 3900/-
Power 3 III 4200/- 3900/-
PowerTree 650 W 4750/- 4500/-
SCANNER
Mustock 1248 5500/- 5250/-
HP 2410 7900/- 7500/-
HP G3110 14500/- 14000/- (Negative)
COMPUTER TABLE
3000/- 2800/-
3500/- 3200/-
3700/- 3500/-
NETWORK
DLink Broadband Router (4 Port) 5700/- 5000/-
DLink Bradband Router (4 Port) Wireless 6500/- 6250/-
DLink Network Switch (8 Port) 3500/- 2500/-
DLink Network Switch (16 Port) 5900/- 4500/-
RAM
Kingston 1 GB (800) 1900/- 1700/-
Kingston 2 GB (800) 3500/- 3200/-
PRINTER
HP D1560 Colour 4500/- 4200/-
Canon IP1980 Colour 5500/- 5000/-
HP 1005 Laserjet 13900/- 13500/-
HP 4355 All in One 14700/- 14000/-
(Printer, Scanner, Copier)
PROCESSOR
Intel 2.20 Ghz / 1M DualCore 8400/- 8000/-
Intel 2.50 Ghz / 2M DualCore 9200/- 8900/-
Intel 2.66 Ghz / 2 M DualCore 9500/- 9000/-
Intel 2.80 Ghz / 3M Core 2 Duo 15000/- 14750/-
MOTHERBOARD
Asrock G31 5700/- 5300/-
Foxconn G31 5900/- 5500/-
Asus P5KPL-AM 6700/- 6400/-
Intel DG31 PR 7500/- 7200/-
Longtron 478 6500/- 5600/-
Biostar G31 5900/- 5200/-
CASING
ATX Casing 3000/- 2600/-
UPS BATTERY 12 V 1400/- 1200/-
PROLINK
Broadband 3.5 G USB HSDPA Modem (SIM) 10500/- 9900/-
MONITOR
CRT 17" 11000/- 10000/-
LCD 15" 10750/- 10250/-
LCD 19" 16500/- 15900/-
SUBWOOFER
Microlab 2.1 (M280) 3500/- 3000/-
Microlab 5.1 6000/- 5500/-
Creative 2.1 3000/- 2500/-
Creative 5.1 7500/- 6750/-
TV CARD
Internal TV Card 3000/- 2400/-
CRT Combo TV Box 3000/- 2750/-
LCD Combo TV Box 5000/- 4900/-
POWER SUPPLY
400 W 1300/- 1100/-
500 W 1500/- 1250/-
MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.
* Stock Available * Warranty Value 1-3 years

"தேர் உலா வரும் நல்லைக் குமரன்
அருள் என்றும் நிலைக்க"

பட்டுசாறி, வேக்சாறி, கொட்டன்சாறி,
ருசுசாறி, சல்வார் துணி,
மற்றும் அனைத்து
ரெடிமேற் ஆடைகளையும்
பெற்றுக் கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

சரவணா புடவையகம்

இல. 526,
பருத்தித்துறை வீதி,
சிவன் கோவில் அருகாமை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C-3083)

"உனை நாடி வருபவர்களுக்கு
நல்லருள் காட்டி விடு கந்தா"

அழகு சாதன, அன்பளிப்புப் பொருட்கள்,
பிளாஸ்ரிக் பொருட்கள், வாழ்த்து மடல்கள்
மற்றும் விளையாட்டுப் பொருட்களை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
மற்றும்
உலகின் எப்பாகத்திலிருந்தும் பணத்தை
இலகுவாகப் பெற்றுக் கொள்ள
WESTERN UNION
மணி மாஸ்ரர்
MMBL
MONEY Master
சந்தியா மல்ரி கோட்யாட்
(C-3082) 531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.